**தலைப்பு 275 - பொலன்னறுவை மாவட்ட செயலகம்**

**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2013 ஆம் ஆண்டு**

---

## 1.1 மாவட்ட செயலகத்தின் பிரதான செயற்பணிகள்

(அ) நியதிச்சட்ட கட்டளைச் சட்டங்களின் வாயிலாக ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களையும் பொறுப்புகளையும் நிறைவேற்றுதல்.

(ஆ) அரசாங்கத்தின் பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் அபிவிருத்திச் செயற்திட்டங்கள் (சமுர்த்தி மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்) என்பனவற்றை அரசாங்கத்தின் விதிமுறைகள், ஆலோசனைகள், வழிகாட்டல் என்பவற்றிற்கு அமைய நடாத்துவதற்கு உறுதியளித்தல்.

(இ) மாவட்டத்தின் சகல அரச நிறுவனங்கள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களினூடாக மக்களின் அபிவிருத்திக்காக நிறைவேற்றப்படும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை சிறப்பாகச் செயற்படுத்துவதற்குத் தேவையான ஒத்துழைப்பு, ஒருங்கிணைப்பு மற்றும் வழிகாட்டல்

(ஈ) அரசாங்கத்தின் மாவட்டப் பிரதிநிதியாகச் செயற்படுதல்.

(உ) மாவட்டத்தில் இயற்கை அனர்த்தம் அல்லது ஏனைய இடர்கள் ஏற்படுமிடத்து நேரடிச் செயற்பாட்டில் ஈடுபட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

## 1.2 மாவட்ட செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள்

(அ) தமன்கடுவ
(ஆ) ஹிங்குரக்கொட
(இ) மெதிரிகிரிய
(ஈ) லங்காபுர
(உ) திம்புலாகல
(ஊ) வெலிகந்த
(எ) எலஹெர

## 1.3 கணக்காய்வின் நோக்கெல்லை

பொலன்னறுவை மாவட்ட செயலகத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக்

குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 நவம்பர் 20 ஆந் திகதி மாவட்டச் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக்கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைக்கக்கூடியதாகவுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமானளவு விரிவான கணக்காய்வை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

------------------------------------------------------------------------------------------------------------------------------------------

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 1.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்

-----------------------------------------------------

2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் பொலன்னறுவை மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இந்த அறிக்கையின் (அ) முதல் (உ) வரையிலுமான பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் கீழேயுள்ள 1.6 முதல் 1.14 வரையிலான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமானதாக தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(அ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிருக்காமை**

மாவட்டச் செயலகம் மற்றும் 05 பிரதேச செயலகங்களினால் கீழே காட்டப்பட்டுள்ள பதிவேடுகள் பேணப்பட்டிருக்காததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்காமை கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டது.

| அலுவலகம் | பதிவேட்டின் வகை | தொடர்புடைய பிரமாணம் | அவதானிப்பு |
|---|---|---|---|
| தமன்கடுவ பிரதேச செயலகம் | முற்பணங்கள் பதிவேடு | நி.பி. 371 | பேணியிருக் கவில்லை. |
| திம்புலாகல பிரதேச செயலகம்<br>வெலிகந்த பிரதேச செயலகம்<br>தமன்கடுவ பிரதேச செயலகம் | கணனிகள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பேணியிருக் கவில்லை. |
| வெலிகந்த பிரதேச செயலகம் | நிலையான சொத்துக்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 03 பட்டோலையின் 287 ஆம் படிவம் | பேணியிருக் கவில்லை. |
| திம்புலாகல பிரதேச செயலகம்<br>தமன்கடவ பிரதேச செயலகம்<br>வெலிகந்த பிரதேச செயலகம் | பொது 58 படிவத்தில் காசுப் புத்தகம் | 2013 நவம்பர் 18 ஆந் திகதிய 04/2013 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 01 ஆம் பந்தி | பேணியிருக் கவில்லை. |
| மாவட்டச் செயலகம் | கொள்வனவுக் குழு உறுப்பினர்களின் வருகைப் பதிவேடு | அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 2.11.2 ஆம் வழிகாட்டல் | பேணியிருக் கவில்லை. |
| வெலிகந்த பிரதேச செயலகம் | விடுமுறைகள் பதிவேடு | தாபன விதிக் கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 1.7 ஆம் உப பிரிவு | நாளதுவரையாக பேணியிருக் கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| வெலிகந்த பிரதேச செயலகம் | வருகைப் பதிவேடு | தாபன விதிக் கோவையின் XXIII ஆம் அத்தியாயத்தின் 1.3 ஆம் உப பிரிவு | நாளதுவரையாக பேணியிருக் கவில்லை. |
| திம்புலாகல பிரதேச செயலகம் | யானை வெடிகள் பெறுவனவு மற்றும் வழங்கல் பதிவேடு | நி.பி. 445(2) | நாளதுவரையாக பேணியிருக் கவில்லை. |
| வெலிகந்த பிரதேச செயலகம்<br>ஹிங்குரக்கொட பிரதேச செயலகம் | ஓய்வூதியம் பெறுனர் பதிவேடு | ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் 2009 யூன் 08 ஆந் திகதிய 11/2009 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் (i) மற்றும் (ii) ஆம் பிரிவுகள் மற்றும் 2011 யூன் 14 ஆந் திகதிய ஓய்/சுற்றறிக்கை/2011 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கையின் 02 ஆம் இலக்க கடிதம் | பேணியிருக் கவில்லை. |
| லங்காபுர பிரதேச செயலகம் | அரசாங்க உத்தியோகபூர்வ இல்லங்கள் பதிவேடு | நி.பி. 445(2) | பேணியிருக் கவில்லை. |

**(ஆ) கணக்காய்விற்கான சான்றின்மை**

ஹிங்குரன்கொட பிரதேச செயலகத்தின் 24 செயற்திட்டக் கோவைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமை காரணமாக, கணக்காய்வில் அவற்றை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

**(இ) ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(i) மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

மாவட்டச் செயலகத்திற்காக வழங்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 680,358,340 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் இதில் ரூபா 664,011,601 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 16,346,739 அல்லது 2.4 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான | | | சேமிப்பு தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| மீண்டுவருபவை | 273,608,340 | 260,462,068 | 13,146,272 | 4.8 |
| மூலதனம் | 406,750,000 | 403,549,533 | 3,200,467 | 0.8 |
| **மொத்தம்** | **680,358,340** | **664,011,601** | **16,346,739** | **2.4** |

**(ii) பாதீட்டு முரண்கள்**

- செலவின விடயமொன்றிற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 50,000 தேறிய நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

- 7 செலவின விடயங்களுக்காக மிகையான நிதி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 6 சதவீதம் முதல் 43 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

**(iii) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்துதல்**

பல்வேறு செயற்பாடுகளுக்காக 22 அமைச்சுக்கள் மற்றும் 19 திணைக்களங்களினால் ரூபா 1,599,558,403 கூட்டுத்தொகையான நிதி ஏற்பாடுகள் மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதி ஏற்பாடுகளிலிருந்து முறையே ரூபா 746,442,845

மற்றும் ரூபா 568,414,624 தொகைகள் என ரூபா 1,314,857,469 கூட்டுத்தொகையானது பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியளவில் அந்த நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்திய பின்னரான சேமிப்பு முறையே ரூபா 278,179,828 மற்றும் ரூபா 7,024,688 என ரூபா 285,204,516 கூட்டுத்தொகையாக அல்லது வழங்கப்பட்ட நிதியேற்பாட்டில் முறையே 27.15 சதவீதத்திற்கும் 1.22 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சளவில் காணப்பட்டது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவைகள் திணைக்களம் மற்றும் வினைத்திறன் மேம்பாட்டு அமைச்சு என்பவற்றினால் மாவட்டச் செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டினை மிகைத்து முறையே ரூபா 460,008 மற்றும் ரூபா 43,575 என ரூபா 503,583 கூட்டுமொத்தமான தொகை மேலதிகமாகச் செலவிடப்பட்டிருந்தது.

- 10 அமைச்சுக்கள் மற்றும் 04 திணைக்களங்களினால் வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்தியதன் பின்னரான சேமிப்பு அச் செலவின விடயங்களிற்கான தேறிய நிதி ஏற்பாட்டில் 5 சதவீதத்திற்கும் 61 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சளவில் காணப்பட்டது.

**(ஈ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

மாவட்டச் செயலகத்திற்குரிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளவாறான பெறுமதிகள் என்பன கீழே தரப்படுகின்றன.

| | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| விடய இல. | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 27501 | 30,000,000 | 20,790,171 | 17,000,000 | 18,467,037 | 126,000,000 | 77,688,728 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 27501 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின்

கூட்டுத்தொகை ரூபா 76,229,991 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டன.

(ii) கடன்களை அறவிடுவதற்கு முன்னர் மரணித்த உத்தியோகத்தர்களிடமிருந்து இன்னும் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 254,645 கடன் மீதியினை, தாபனவிதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.4 மற்றும் 4.4.1 ஆம் பிரிவுகளின் பிரகாரம் அவர்களது வாரிசுகளிற்குச் செலுத்த வேண்டிய தொகைகளிலிருந்து அறவிட்டுக்கொள்வதற்கு அல்லது அவ்வாறு அறவிடப்படுவதற்கு முடியாதுள்ள தொகையினை கடன்காரர்களின் வாரிசுகளிடமிருந்து அறவிட்டுக் கொள்வதற்கு சட்டமா அதிபரின் ஆலோசனையினைப் பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2012 ஆகஸ்ட் 25 ஆந் திகதி ஓய்வுபெற்ற, பிரதேச செயலாளர் ஒருவரிடமிருந்தும் 2013 ஏப்ரல் 15 ஆந் திகதி ஓய்வுபெற்ற அரசாங்க முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்தும் அறவிடப்பட வேண்டிய முறையே ரூபா 345,616 மற்றும் ரூபா 146,415 கடன் மீதிகள், அவர்கள் தொடர்பாக இடம்பெற்று வருகின்ற ஒழுக்காற்று விசாரணைகள் காரணமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், உத்தியோகத்தர் ஒருவருக்கு எதிராக இடம்பெறுகின்ற ஒழுக்காற்று விசாரணை அல்லது நீதிமன்ற நடவடிக்கை, கடன்களை அறவிடுவதற்கு தடையாக காணப்படாமையால் குறித்த கடன்காரர்களிடமிருந்து கடன்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) வேலை இடைநிறுத்தப்பட்ட 05 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,238,257 கூட்டுத்தொகையான கடன் மீதி இணக்கக் கூற்றுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அக் கடன் மீதியில் 7 ஆண்டுகளிற்கு மேற்பட்ட ரூபா 156,999 கடன் மீதியும், 05 ஆண்டுகளிற்கு மேற்பட்ட ரூபா 62,710 தொகையான 02 கடன் மீதிகளும் 03 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலமாக நிலவி வருகின்ற ரூபா 1,018,548 தொகையான 02 கடன் மீதிகளும் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. வேலை இடைநிறுத்தப்பட்ட அந்த உத்தியோகத்தருக்கு எதிரான வழக்கு இடம்பெற்று வருவதுடன், அந்த வழக்கு முடியும் வரை காத்திருக்காது குறித்த கடன்காரரிடமிருந்து நிலுவை கடன் மீதியினை அறவிடுவதற்கு அல்லது அவ்வாறு கடன்காரரிடமிருந்து அறவிடுவதற்கு முடியாத சந்தர்ப்பத்தில் தாபனவிதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.5 மற்றும் 4.6 ஆம் உப பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) பொது வைப்புக் கணக்கு**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்ட செயலகத்தின் 6003/0/0/51/0/0 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கில் ரூபா 174,434,454 மீதி காணப்பட்டதுடன், இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சமர்ப்பிக்கப்பட்ட கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொது வைப்புக் கணக்கில் காணப்பட்ட மீதி ரூபா 174,434,454 ஆன போதிலும், தனிப்பட்ட மீதிகளின் பட்டோலையின் படி அது ரூபா 174,272,894 ஆக காணப்பட்டமையால் ரூபா 161,560 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ii) மாவட்டச் செயலகத்திற்குரிய பொது வைப்புக் கணக்கின் மீதி ரூபா 149,894,821 ஆன போதிலும், அந்த அலுவலகத்தினால் பேணப்பட்ட பொது வைப்புப் பதிவேட்டின் (பொது படிவம் 69) படி அத்திகதியில் உள்ளவாறான மீதிகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 124,997,679 ஆக காணப்பட்டமையால் ரூபா 24,897,142 கணக்கிணங்காமை அவதானிக்கப்பட்டது.

(iii) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 வருடங்களை விஞ்சிய ரூபா 10,617,740 தொகையான 92 வைப்பு மீதிகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| நிறுவனம் | வைப்பு எண்ணிக்கை | காலங்கடந்த வைப்பின் பெறுமதி |
|---|---|---|
| | | ரூபா |
| மாவட்டச் செயலகம் | 47 | 8,843,802 |
| மெதிரிகிரிய பிரதேச செயலகம் | 04 | 246,207 |
| லங்காபுர பிரதேச செயலகம் | 05 | 13,795 |
| எலஹெர பிரதேச செயலகம் | 07 | 392,617 |
| ஹிங்குரக்கொட பிரதேச செயலகம் | 29 | 1,121,319 |
| | 92 | 10,617,740 |

## 1.6 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 1.6.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

மாவட்டச் செயலகத்தின் செயற்பணியினை அடைந்து கொள்வதற்காக 04 குறிக்கோள்கள் 2013 இன் கூட்டிணைந்த திட்டத்தின் மூலம் முன்வைக்கப்பட்டிருந்தது. பதவியணியினரினதும் பொதுமக்களினதும் வாய்மொழி தொடர்பாடலை முன்னேற்றுதல், மாவட்டத்தில் அரசாங்க

சேவையின் நிலைமையினை வினைத்திறனான மற்றும் பயனுறுதியான நிலைக்கு மாற்றுதல், தகவல் தொழில்நுட்ப பாவனை ஆற்றலை மேம்படுத்தல் மற்றும் பதவியணியினரின் புரிந்துணர்வுடன் கூடிய நல்லுறவை முன்னேற்றுதல் என்பன அக் குறிக்கோள்கள் எனக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அக் குறிக்கோள்களை மீளாய்வாண்டில் அடைந்து கொள்வதற்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கியிருக்கவில்லை.

## 1.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

### (அ) பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டவாறு சில சொத்துக்கள் பயன்படுத்தப்படாது மற்றும் குறைவான பயன்பாட்டுடன் காணப்படுகின்றமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டன.

| | சொத்துக்களின் வகை | அலகுகளின் எண்ணிக்கை | பயன்படுத்தப்படாத அல்லது குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்ட காலம் |
|---|---|---|---|
| (i) | கட்டிடம் | 03 | 01 ஆண்டிற்கு மேலாக |
| (ii) | மோட்டார் வாகனம் | 05 | 01 இற்கும் 05 இற்கும் இடைப்பட்ட ஆண்டுகளாக |
| (iii) | இயந்திராதிகள் | 10 | 02 ஆண்டுகளிற்கு மேலாக |
| (iv) | ஏனைய சொத்துக்கள் | 69 | 01 இற்கும் 07 இற்கும் இடைப்பட்ட ஆண்டுகளாக |

### (ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மாவட்ட செயலகத்திற்கும் பிரதேச செயலகங்களுக்கும் சொந்தமான அரசாங்க உத்தியோகபூர்வ இல்லங்கள் மற்றும் வாகனங்கள் மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டுகளின் போதும் வருடாந்த மெய்மையாய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளிலிருந்து சுட்டிக்காண்பிக்கப்பட்ட மிகைகள், பற்றாக்குறைகள் மற்றும் ஏனைய சிபார்சுகள் தொடர்பாக ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 07 பிரதேச செயலகங்களில் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், மெதிரிகிரிய பிரதேச செயலகத்தின் நிலையான சொத்துக்கள் தொடர்பிலும் திம்புலாகல மற்றும் ஹிங்குரங்கொட பிரதேச செயலங்களின் களஞ்சிய இருப்புக்கள் தொடர்பிலும் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மெதிரிகிரிய, எலஹெர, திம்புலாகல மற்றும் ஹிங்குரான்கொட பிரதேச செயலகங்களினால் அப் பிரதேச செயலகங்களில் காணப்படுகின்ற ஏனைய பொருட்கள் தொடர்பிலும் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(இ) வெளித்தரப்பினர்களிற்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

ஹிங்குரக்கொட பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான 01 ஆம் இலக்க இல்லம் 2008 மார்ச் 12 ஆந் திகதி முதல் உடன்படிக்கைக் காலம் ஆண்டுக்கொரு முறை நீடிக்கப்பட்டு 5 ஆண்டுகளிற்கும் மேற்பட்ட காலமாக மின்னேரிய இராணுவத்தின் தரைப்படை பயிற்சி நிலையத்தின் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தரின் உத்தியோகபூர்வ மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதற்காக வழங்கப்பட்டிருந்ததுடன், இறுதியான உடன்படிக்கைக் காலம் 2013 செப்தெம்பர் 10 ஆந் திகதியுடன் முடிவடைந்திருந்தது. இருப்பினும், அதற்குப் பின்னர் உடன்படிக்கைக் காலம் நீடிப்புச் செய்யப்படாததுடன், 2014 மே மாத இறுதி வரையிலும் மேற்படி அரசாங்க இல்லம் ஹிங்குரக்கொட பிரதேச செயலகத்திற்கு மீளக் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.8 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான இணக்கமின்மைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண அறிவுறுத்தல்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | | |
| (i) XIX ஆம் அத்தியாயத்தின் 6 ஆம் பிரிவு | - | ஏதேனும் பதவிக்கு ஒதுக்கப்பட்டிருக்காத ஹிங்குரக்கொட பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான 13 ஆம் இலக்க அரசாங்க |

இல்லமும், திம்புலாகல பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான 03 அரசாங்க இல்லங்களும், தமன்கடுவ பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான ஒரு அரசாங்க இல்லமும் குத்தகை உடன்படிக்கைகளில் கைச்சாத்திடப்படாது உத்தியோகத்தர்களிற்கு வசிப்பதற்கு ஒதுக்கப்பட்டிருந்தன.

(ii) XIX ஆம் அத்தியாயத்தின் 9 ஆம் பிரிவு - மாவட்டச் செயலகத்திற்குச் சொந்தமான பொதுச் சேவை இல்லங்களில் குத்தகைக் கால எல்லையான 05 ஆண்டுகளினையும் விஞ்சி வசித்துவருகின்ற 08 உத்தியோகத்தர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் கோவை
-----------------------------------------------------

(i) நி.பி. 104(4) - விசாரணைகளின் பின்னர் நட்ட இழப்பு இடம்பெற்ற திகதியிலிருந்து மூன்று மாதத்திற்குள் முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மாவட்டச் செயலகத்திற்குச் சொந்தமான 251-3556 ஆம் இலக்க வாகனத்திற்கு 2013 ஆகஸ்ட் 24 ஆந் திகதி இடம்பெற்ற விபத்து தொடர்பான முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்பட் டிருக்கவில்லை.

(ii) நி.பி 142(1) - மாவட்டச் செயலகத்தினால் பேணப்பட்டு வருகின்ற சிற்றுண்டிச்சாலையின் ரூபா 4,000 மாதாந்த வாடகை வருமானம், பல வருடங்களாக அரசாங்க வருமானமாக கருத்திற்கொள்ளப்படாது சட்டரீதியான அடிப்படையொன்றின்றி நடாத்திவருகின்ற நலன்புரிச் சங்கத்தின் வருமானமாக எடுக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| (iii) | நி.பி. 272 | - | செலுத்திய சகல உறுதிச்சீட்டுக்களும் அவற்றின் தொடர் இலக்கத்திற்கேற்ப கோர்வை செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், தமன்கடுவ பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் தொடர் இலக்கத்திற்கேற்ப கோர்வை செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | நி.பி. 371(2) | 83,500 | செயல்நிமித்த உப கட்டுநிதிகள் அவை வழங்கப்பட்ட பணி நிறைவேற்றப்பட்டவுடன் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், மெதிரிகிரிய பிரதேச செயலகத்தினால் அதற்கு முரணாக 08 சந்தர்ப்பங்களில் பல்வேறு பணிகளிற்காக உத்தியோகத்தர்களிற்கு வழங்கப்பட்டிருந்த முற்பணங்களை தீர்க்குகையில் 1 ½ மாதங்கள் தொடக்கம் 8 ½ மாதங்கள் வரையான கால தாமதத்துடன் தீர்க்கப்பட்டிருந்தன. |
| (v) | நி.பி. 388 மற்றும் 389 | 13,990,235 | வெலிகந்த பிரதேச செயலகத்தின் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளிற்கான காசோலை வழங்கல் பதிவேட்டின் படி, 148 காசோலைகள் தொடர்பில் காசோலைகளைப் பெற்றுக் கொண்டமைக்கு அல்லது பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டதற்கு எவ்விதக் கைச்சாத்திடல்களும் பதிவுகளும் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. |
| (vi) | நி.பி. 1646 | - | நாளாந்த ஓட்டக் குறிப்புகள் மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் என்பன ஒவ்வொரு மாதமும் முடிவடைந்த பின்னர் தொடர்ந்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும், எலகர மற்றும் திம்புலாகல பிரதேச செயலகங்களிற்குச் சொந்தமான வாகனங்களினதும் லங்காபுர பிரதேச |

செயலகத்தின் NP-PA-4981 ஆம் இலக்க குழாம் வாகனத்தினதும் நாளாந்த ஓட்டக் குறிப்புகள் மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் என்பன அவ்வாறு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பிவைக்கப்படவில்லை.

(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் கொள்வனவு வழிகாட்டல்கள் கோவை

--------------------------------------------------

(i) 2.11.1(அ) மற்றும் (ஆ) வழிகாட்டல் - கொள்வனவுக் குழுக் கூட்டத்திற்காக தீர்மானிக்கப்பட்ட திகதி, நேரம் மற்றும் இடம் போன்றவற்றை தலைவரைக் கேட்டறிந்து குழுவின் செயலாளரினால் கொள்வனவுக் கால அட்டவணைக்கிணங்க நிச்சயிக்க வேண்டிய போதிலும், மாவட்டச் செயலகத்தினால் அதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2.11.3 ஆம் வழிகாட்டல் - குழுக் கூட்டங்களின் அறிக்கைகள், கொள்வனவுக் கையேட்டில் உள்ளடங்கியுள்ள படிவத்தின் பிரகாரம் அறிக்கையிடப்பட்டு அது வருகை தந்துள்ள உறுப்பினர்களினால் உறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், மாவட்டச் செயலகத்தினால் 2013 ஆம் ஆண்டிற்குரிய குழுக் கூட்டங்களின் அறிக்கைகள், அவ்வாறு உறுப்பினர்களினால் உறுதிப்படுத்தப்படாதிருந்த 9 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(iii) 2.14.1 ஆம் வழிகாட்டல் - ரூபா 500,000 இற்குக் குறைந்த பொருட்களையும் சேவைகளையும் கொள்வனவு செய்வதற்கு முன்னர் சந்தை விலை ஒப்பீட்டு முறையின் படி, முன்னர் அறிவிக்கப்பட்ட திகதியொன்றில் பொறியிடப்பட்ட 05 கூறுவிலைகளிற்குக் குறையாமல் கோரப்பட்டு பகிரங்கரமாக கூறுவிலைகளைத் திறப்பதன்

மூலம் பொருட்களும் சேவைகளும் கொள்வனவு செய்யப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக எலஹர பிரதேச செயலகத்தின் விலை ஒப்பிடுதல்கள் 1 – 3 இற்கு இடைப்பட்ட எண்ணிக்கையில் கிடைத்திருந்த 8 சந்தர்ப்பங்களிலும் ஹிங்குரக்கொட பிரதேச செயலகத்தின் விலை ஒப்பிடுதல்கள் 1 – 2 இற்கு இடைப்பட்ட எண்ணிக்கையில் கிடைத்திருந்த 02 சந்தர்ப்பங்களிலும் வெலிகந்த பிரதேச செயலகத்தின் கூறுவிலைக் கோரல்களின்றிய 31 சந்தர்ப்பங்களிலும் மாவட்டச் செயலகத்தின் விலை ஒப்பிடுதல்கள் 1 – 2 இற்கு இடைப்பட்ட எண்ணிக்கையில் கிடைத்திருந்த 03 சந்தர்ப்பங்களிலும் அந்த விலை ஒப்பிடுதல்களை அடிப்படையாகக் கொண்டு கொள்வனவுத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருந்தன.

(ஈ) பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுற்றுநிருபங்கள் மற்றும் கடிதங்கள்

---

| | | |
|---|---|---|
| (i) 1987 சனவரி 05 ஆந் திகதிய கே.887 ஆம் இலக்க உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுற்றுநிருபம் | - | சிக்கன வாடகையினை அறவிடுவதற்கு செயலாளரின் அனுமதியினைப் பெற்றுக் கொள்தல் வேண்டுமென்பதுடன் அந்த சிக்கன வாடகை செல்லுபடியாவது ஒரு வருடத்திற்கேயான போதிலும், 2011 ஆம் ஆண்டின் விலை மதிப்பீட்டு அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு திம்புலாகல பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான 01 மற்றும் 02 ஆம் இலக்க எழுதுவினைஞர் விடுதிகளிற்காக மீளாய்வாண்டில் ரூபா 975 வீதம் சிக்கன வாடகை அறவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சுச் செயலாளரின் 2006 மார்ச் 21 ஆந் திகதிய எச்ஏ/டீஏ/12/27 ஆம் இலக்க கடிதம் மற்றும் சம இலக்கம் கொண்ட 2009 யூன் 12 ஆந் திகதிய கடிதம் | | சகல பிரதேச செயலாளர்களும் தமது கடமை நிலையங்களுக்குரிய உத்தியோகபூர்வ இல்லங்களில் கட்டாயமாக வசிக்க வேண்டியிருந்ததுடன் பிரதேச செயலாளர்கள் தமது உத்தியோகபூர்வ இல்லங்களில் வசிக்காது விடின் அதற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய பொருத்தமான காரணங்களைச் சமர்ப்பித்து அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரத்தைப் பெற்றதன் பின்னர் பொருத்தமான உத்தியோகத்தர் ஒருவரின் குடியிருப்பிற்காக அந்த உத்தியோகபூர்வ இல்லத்தினைக் கையளித்து தாபனவிதிக் கோவையின் பிரகாரம் அதில் குடியிருக்கும் உத்தியோகத்தரிடமிருந்து விடுதி வாடகை அறவிடப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | அரசாங்க நிதிச் சுற்றுநிருபங்கள்<br>----------------------------------------- | | |
| (i) | 2001 பெப்ரவரி 06 ஆந் திகதிய 393 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 4.2 ஆம் பந்தி | 53,700 | தனிப்பட்ட பிரயாணங்களுக்காக உத்தியோகபூர்வ வாகனங்களைப் பயன்படுத்துவற்கு உரித்துள்ள உத்தியோகத்தர்கள் அரசாங்க கட்டளையின் அடிப்படையில் எரிபொருள் பெற முடியாததுடன், தனது வழமையான கடமைகளிற்குப் புறம்பான விசேட கடமைகளிற்காக உத்தியோகபூர்வ வாகனத்தை பயன்படுத்த வேண்டி ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில் அதற்காக உண்மையாக செலவான எரிபொருள் செலவினத்தை மீள்நரப்புவதற்கு முடியுமான போதிலும், அதற்கு முரணாக திம்புலாகல பிரதேச செயலகத்தின் உத்தியோகபூர்வ வாகனத்திற்காக ஆண்டின் போது 21 சந்தர்ப்பங்களில் 450 லீற்றர் எரிபொருள், அரசாங்கக் கட்டளையின் அடிப்படையில் பெறப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2009 செப்தெம்பர் 18 ஆந் திகதிய பீஎவ்-437 ஆம் இலக்க சுற்றுநிருபம் | - | சகல அரசாங்க மற்றும் அரை அரசாங்க நிறுவனங்கள் தமது நிறுவனத் தேவைகளிற்கமைய மோட்டார் வாகன காப்புறுதி பாதுகாப்பை தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திடம் அல்லது வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தபனத்திடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், மாவட்டச் செயலகத்தின் 252-9909 ஆம் இலக்க மற்றும் 32-2192 ஆம் இலக்க வாகனங்களிற்காக காப்புறுதிப் பாதுகாப்பு பெறப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | 2010 மே 22 ஆந் திகதிய பீஎவ்-443 ஆம் இலக்க சுற்றறிக்கை | 597,725 | அரசாங்க நிறுவனங்கள் தமது எரிபொருள் தேவையினை பெற்றுக்கொள்கையில், கூட்டுறவுச் சங்கங்களிற்குச் சொந்தமான எரிபொருள் நிரப்பும் நிலையங்களிற்கு முன்னுரிமை வழங்கப்பட்டு தேவைக்கேற்றவாறு, குறித்த கூட்டுறவுச் சங்கங்களிற்கு வைப்புத் தொகையொன்றை வைப்புச் செய்து அந்த வைப்புத் தொகையினை விஞ்சாத அடிப்படையில் அல்லது காசு செலுத்தி எர்பொருளை பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், அதற்கு முரணாக திம்புலாகல பிரதேச செயலகத்தினால் மீளாய்வாண்டிற்குரிய சகல எரிபொருள் தேவைகளும் தனியார் எரிபொருள் நிரப்பும் நிலையங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. |
| (ஊ) | தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை<br>-------------------------------------- | | |
| | 2013 மார்ச் 28 ஆந் திகதிய 1/2013 ஆம் இலக்க பன்முகப்படுத் தப்பட்ட பாதீட்டுச் சுற்றறிக்கை | 21,805 | 2013 இன் பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இச் சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களிற்கு முரணாக தமன்கடுவ பிரதேச செயலகத்தினால் 7 ஊழியர் நலன்புரிச் சங்கங்களிற்கு உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்தன. |

| | | |
|---|---|---|
| (எ) | ஏனைய சுற்றறிக்கைகள்<br>----------------------------------------<br>2008 பெப்ரவரி 13 ஆந் திகதிய 2008/11 ஆம் இலக்க சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் மேம்பாட்டு அமைச்சின் சுற்றுநிருபம் | - (i) 24 மாதங்களுக்கு மேற்பட்டதும் 60 மாதங்களுக்கு குறைவான வயதுத் தொகுதியிலுள்ள பிள்ளைகளுக்காக முன்பள்ளிப் பாடசாலை மற்றும் பகல் நேர காப்பகங்கள் ஊடாக பால் கிண்ணம் நிகழ்ச்சித்திட்டத்தினை அமுல்படுத்துகையில் எலஹெர பிரதேச செயலக பிரிவிலுள்ள 52 முன்பள்ளிப் பாடசாலைகளில் 13 பாடசாலைகளிலும் தமன்கடுவ பிரதேச செயலக பிரிவிலுள்ள 69 முன்பள்ளிப் பாடசாலைகளில் 18 பாடசாலைகளிலும் திம்புலாகல பிரதேச செயலக பிரிவிலுள்ள 75 முன்பள்ளிப் பாடசாலைகளில் 60 பாடசாலைகளிலும் இந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.<br><br>(ii) லங்காபுர பிரதேச செயலக பிரிவிலுள்ள 30 முன்பள்ளிப் பாடசாலைகளிலுள்ள 1041 பிள்ளைகளிற்காக மீளாய்வாண்டின் முதல் 09 மாதங்களின் போது பால் கிண்ணம் நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப் படாதிருந்ததுடன் ஆண்டின் இறுதி 03 மாதங்களின் போது 15 முன்பள்ளிப் பாடசாலைகளிலுள்ள 560 பிள்ளைகளிற்கு இந்த நலன் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. |

## 1.9 செயற்திட்ட அமுலாக்கலிலுள்ள நலிவுகள்

----------------------------------------------------------------

செயற்திட்டங்களை முடிவுறுத்தாது கைவிட்டமை மற்றும் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள் தொடர்பாக தெரிவுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) செயற்திட்டங்களை பூரணப்படுத்தாது கைவிடுதல்**

மாவட்டச் செயலகத்தினால் பின்வரும் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், அச் செயற்திட்டங்கள் பூரணப்படுத்தாது கைவிடப்பட்டிருந்தன.

| செயற்திட்டம் | மதிப்பீட்டுக் கிரயம் | ஆரம்பிக் கப்பட்ட திகதி | 2013 திசெம்பர் 31 இல் உள்ளபடியான செலவினம் | கைவிடப்பட்டமைக்கான காரணம் |
|---|---|---|---|---|
| | ரூபா | | ரூபா | |
| தேசத்திற்கு மகுடம் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 2013 இன் கீழ் தேகப்பயிற்சி மருங்கினை நிர்மாணித்தல் | 26,505,983 | 2013.02.05 | 4,456,324 | பொருளாதார அபிவிருத்தி / சுகாதார அமைச்சர்களின் தீர்மானத்திற்கமைய |

**(ஆ) செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்**

மாவட்டச் செயலகத்தினால் பின்வரும் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

| செயற்திட்டம் | மதிப்பீட்டுக் கிரயம் (வற் நீங்கலாக) | ஆரம்பிக் கப்பட்ட திகதி | பூரணப் படுத்த வேண்டிய திகதி | 2013 திசெம்பர் 31 இல் உள்ளபடியான செலவினம் | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | | | ரூபா | |
| லங்காபுர பிரதேச செயலகத்தின் புதிய கழிவறை முறைமையினை நிர்மாணித்தல் | 2,155,226 | 2013.11.06 | 2013.12.31 | 274,582 | சமர்ப்பிக்கப்படவில்லை |
| றோயல் மத்திய மகா வித்தியாலயத்தின் பிரதான மண்டபத்தை புதுப்பித்தல் | 29,220,274 | 2013.09.06 | 2013.06.05 | 3,600,000 | காலம் இருத்தல் |
| கிரிதலே மகா வித்தியாலயத்தின் கேட்போர்கூட நிர்மாணம் | 44,406,308 | 2013.12.30 | 2014.06.30 | 500,209 | உடன்படிக்கைக் காலம் 2014.06.30 ஆக இருந்தமை |
| றோயல் மத்திய மகா வித்தியாலயத்தின் ஒரு மாடி வகுப்பறைக் கட்டிடம் | 10,719,961 | 2013.11.11 | 2014.01.31 | 3,171,189 | உடன்படிக்கைக் காலம் 2014.01.31 ஆக இருந்தமை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வாரச் சந்தையினை நிர்மாணித்தல் - ஹிங்குரங்கொட | 20,000,000 | 2013.06.12 | 2013.12.12 | 4,407,618 | மழையுடன் கூடிய காலநிலை மற்றும் இச் செயற் திட்டங்கள் பிரதேச சபையின் ஊடாக நிறைவேற்றப் படுபவை என்பதுடன் அச் சபைகளின் நிர்வாகத்தில் ஏற்பட்ட பிரச்சினை கள் என்பன காரணங்களாகும். |
| வாரச் சந்தையினை நிர்மாணித்தல் - லங்காபுர | 20,000,000 | 2013.06.12 | 2013.12.12 | 12,068,629 | |
| வாரச் சந்தையினை நிர்மாணித்தல் - தமன்கடுவ | 20,000,000 | 2013.06.12 | 2013.12.12 | 5,459,661 | |
| வாரச் சந்தையினை நிர்மாணித்தல் - வெலிகந்த | 20,000,000 | 2013.06.10 | 2013.12.10 | 7,187,728 | |
| வாரச் சந்தையினை நிர்மாணித்தல் - மெதிரிகிரய | 20,000,000 | 2013.06.24 | 2013.12.24 | 13,463,566 | |
| வாரச் சந்தையினை நிர்மாணித்தல் - எலஹெர | 20,000,000 | 2013.06.13 | 2013.12.13 | 5,241,879 | |
| மஹசேன் மாளிகை - ஹிங்குரங்கொட | 40,107,328 | 2013.09.05 | 2014.09.05 | 15,662,473 | செயற்திட்டங்களை பூரணப்படுத்தவதற் காக ஓராண்டு செல்லும் என்பதனால் |
| வெள்ளை மாளிகை – பொலன்னறுவை | 40,101,843 | 2013.09.20 | 2014.09.20 | 8,541,983 | |

## 1.10 செயலாற்றல்

கூட்டிணைந்த திட்டம் மற்றும் 2013 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பரிசோதனையில், கூட்டிணைந்த திட்டத்திற்கு இணங்க செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படாதிருந்ததுடன், தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திலுள்ள எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்களை நிறைவேற்றுவதுடன் சம்பந்தப்பட்ட செயற்பாடுகள் வெளிப்படுத்தப்பட்டிருக்காமையால் மாவட்டச் செயலகத்தின் செயன்முன்னேற்றம் தொடர்பில் மதிப்பீடொன்றை செய்ய முடியவில்லை.

**1.11 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

----------------------------------------------------------

மாவட்டச் செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல்வாங்கல்கள் முறையற்றவையாகக் காணப்பட்டன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சந்தர்ப்பங்களில் சில கீழே தரப்படுகின்றன.

(அ) 2013 இன் வெள்ள அனர்த்த நிலைமை காரணமாக, கிரிமெடிய கனிஷ்ட வித்தியாலயத்தில் தாபிக்கப்பட்டிருந்த நலன்புரி நிலையத்திற்கு சமைத்த உணவுகளை வழங்குவதற்காக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த மரக்கறி வகைகள் மற்றும் பொருட்களிற்காக ஹிங்குரக்கொட நாமல் வர்த்தக நிலையத்திற்கு 2013 மார்ச் 06 ஆந் திகதிய 3/16 ஆம் இலக்க கொடுப்பனவு உறுதிச்சீட்டின் மூலம் ரூபா 347,250 செலுத்தப்பட்டிருந்தது. தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட விலைகளின் படி ரூபா 38,000 பெறுமதியான மரக்கறி வகைகளிற்காக ரூபா 98,000 செலுத்தப்பட்டிருந்ததுடன், அதற்கமைய ரூபா 60,000 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே மொத்தமாக கொள்வனவு செய்யப்பட்டிருந்த இந்த மரக்கறிகளிற்கான விலைகள், ஹிங்குரக்கொட பிரதேசத்தில் இந்த அளவிற்கு உயர்வான விலைகள் நிலவவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) எலஹெர பிரதேச செயலகத்தினால் மீளாய்வாண்டில் 04 செயலமர்வுகள் நடாத்தப்பட்டிருந்தன. அதற்காக 295 உத்தியோகத்தர்கள் பங்குபற்றியிருந்த போதிலும், மதிப்பீட்டிற்கமைய, 465 உத்தியோகத்தர்களிற்கு செலவுகள் செய்யப்பட்டிருந்தன. அதன் படி, பங்குபற்றியிருக்காத 170 உத்தியோகத்தர்களிற்காக ரூபா 18,986 செலவிடப்பட்டிருந்தது.

(இ) மரக் கன்றுகளை கொள்வனவு செய்கையில் கொள்வனவுக் குழுவொன்றை நியமித்து, அதன் பரிந்துரைக்கமைய கொள்வனவுகள் செய்யப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு நடவடிக்கை எடுக்காதும், கன்றுகளை கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்ட சந்தர்ப்பங்களிலும், கன்றுகளை கொள்வனவு செய்த சந்தர்ப்பங்களிலும் அக் கன்றுகள் நல்ல தரத்தில் உள்ளனவா என்பது தொடர்பில் விவசாய ஆலோசகர்களின் பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்ளாதும், திம்புலாகல களுகலே பிரதேசத்தில் அமைந்துள்ள சிறிய அளவில் குறைந்த வசதிகளுடன் நடாத்திச் செல்லப்படுகின்ற சிறிய நாற்றுமேடையொன்றிடமிருந்து 56,680 மிளகு, பலா மற்றும் சிறிய தோடை கன்றுகள் ரூபா 2,198,600 தொகை செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன், அத் தொகையில் ரூபா 389,000 பெறுமதியான இரண்டு காசோலைகள் நாற்றுமேடையின் உரிமையாளருக்கு அன்றி வெளி நபர்களிற்குச் செலுத்தப்பட்டிருந்தது. பிரதேசத்தில் பயிரிடுவதற்காக பகிர்ந்தளிக்கப்பட்ட

மிளகுக் கன்றுகள் பகிர்ந்தளிக்கப்படுகையில் உரிய தரத்தில் காணப்படாமையாலும் அநேக கன்றுகள் நோய்களால் பீடிக்கப்பட்டிருந்தமையாலும் அக் கன்றுகள் நடப்பட்டு ஒரு மாதம் செல்வதற்கு முன்னரே அவை அழிவடைந்திருந்தமை காரணமாக பிரதேசத்தில் பயிரிடுவதற்காக பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த மிளகுக் கன்றுகளில் ஏறத்தாழ 10% அளவு எஞ்சியிருந்தமை கணக்காய்வுப் பரிசோதனையில் வெளிப்படுத்தப்பட்டது.

(ஈ) திம்புலாகல பிரதேச செயலகத்திற்கு கிடைக்கின்ற யானை வெடிகளின் எண்ணிக்கை பதிவேட்டில் பதியப்படாதிருந்ததுடன், வழங்கலும் முறையற்ற விதத்தில் காணப்பட்டது. கிடைத்திருந்த யானை வெடிகள் பாதுகாப்பற்ற விதத்தில் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்ததுடன், வெடி பொருளான யானை வெடிகளை களஞ்சியப்படுத்தல் தொடர்பில் உரிய பாதுகாப்பு முறைகள் பின்பற்றப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

## 1.12 நட்டங்களும் சேதங்களும்

(அ) அரசாங்கத்திற்குச் சொந்தமான ஆதனங்களை கவனயீனமாகவும் மோசடியாகவும் பயன்படுத்தியமை காரணமாக 31 ஸ்ரீ 141 ஆம் இலக்க ஜீப் வாகனத்தின் சார்பில் பொலன்னறுவை மாவட்டச் செயலகத்திற்குச் செலுத்த வேண்டியேற்பட்டிருந்த ரூபா 373,200 நட்டம் தொடர்பில் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்கள் என பெயரிடப்பட்டிருந்த உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 105 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திம்புலாகல பிரதேச செயலகத்திலிருந்து காணாமல் போயிருந்த ரூபா 55,920 பெறுமதியான 699 யானை வெடிகள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 105 (1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) திம்புலாகல பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான வாகனமொன்று விபத்தில் சிக்கியிருந்ததுடன் அதனை திருத்துவதற்காக ரூபா 433,098 செலவிடப்பட்டிருந்தது. இதற்காக காப்புறுதிக் கம்பனியினால் சேத இழப்பீடாக ரூபா 320,729 வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய, ரூபா 112,369 ஆன நட்டத்தினை அறவிடுவதற்கு அல்லது பதிவழிப்பதற்கு நிதிப்பிரமாணம் 109 இன் பிரகாரம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2010 யூலை 25 ஆந் திகதி மாத்தளை கண்டி வீதியில் இடம்பெற்ற வாகன விபத்து காரணமாக, விபத்தில் சிக்கியிருந்த திம்புலாகல பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான கெப் வாகனத்திற்காக காப்புறுதிப் பாதுகாப்பு பெறப்படாதிருந்ததுடன் அந்த வாகனத்தை ஓட்டிச் சென்ற பிரதேச செயலாளரினால் அந்த நட்டப்

பெறுமதியாக ரூபா 60,000 மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. இருப்பினும், விபத்து ஏற்பட்டு தற்போது 4 ½ ஆண்டுகள் கடந்திருந்த போதிலும், அது தொடர்பில் நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் நட்டத்துடன் தொடர்புடைய இறுதி அறிக்கை வழங்கப்படாதிருந்ததுடன், அந்த வாகனம் எவ்வித திருத்தமும் செய்யப்படாது துருப்பிடித்த நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

**1.14 முகாமைத்துவ நலிவுகள்**

இது தொடர்பில் பின்வரும் அதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒப்பந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடுகையில், 03 பிரதிகளில் கைபொப்பமிட்டு அதில் ஒரு பிரதியினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், 07 பிரதேச பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்டச் செயலகத்தினால் மீளாய்வாண்டில் கைச்சாத்திட்டிருந்த எந்தவொரு உடன்படிக்கையின் பிரதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலும் காணப்படுகின்ற கொடுக்கல் வாங்கல்களின் நிலைமை தொடர்பில் தொடர்ந்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர், வங்கிக் கணக்கிணக்கக் கூற்றொன்றை தயாரித்து, அதன் ஒரு பிரதியினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பிவைக்க வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் 07 பிரதேச பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்டச் செயலகத்தினால் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தமன்கடுவ பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர்களது வருகைகள் மற்றும் வெளிச்செல்லல்கள் குறித்து வைக்கப்படுகின்ற கைவிரல் அடையாளமிடல் இயந்திரம், அலுவலக உத்தியோகத்தர்களது வருகைகள் மற்றும் வெளிச்செல்லல்களை குறித்து வைப்பதற்காக பயன்படுத்தப்படுகின்ற வருகை பதிவேடு மற்றும் விடுமுறைப் பதிவேடு என்பன உரிய மேற்பார்வை உத்தியோகத்தரின் கட்டுப்பாடின்றி பேணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) எலஹெர மற்றும் மெதிரிகிரிய பிரதேச செயலகங்களின் விடுமுறை பதிவேடுகளின் பரிசோதனையின் போது மீளாய்வாண்டில் எந்தவொரு விடுமுறையினையும் எடுக்காதிருந்த 12 உத்தியோகத்தர்கள் அவதானிக்கப்பட்டதுடன் சகல உத்தியோகத்தர்களும் வெளிக்கள வேலைகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்கள் என்பது அவதானிக்கப்பட்டது. இந்த உத்தியோகத்தர்களின் விடுமுறைகள், எதிர்கால நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் மதாந்தம் ஆற்றிய வேலைகள் உரிய விதத்தில் மேற்பார்வை உத்தியோகத்தர் ஒருவரைக் கொண்டு பரிசோதனைக்கு

உட்படுத்தப்படாமையும் அந்த வெளிக்கள உத்தியோகத்தர்களை நெருக்கமாக மேற்பார்வை செய்வது தொடர்பில் பொறிமுறையொன்று தயாரிக்கப்பட்டிருக்காமையும் அவதானிக்கப்பட்டது.

(உ) மாவட்டச் செயலகத்திற்குச் சொந்தமான 5 அரசாங்க இல்லங்கள் மற்றும் 2 விருந்தினர் விடுதிகளை புதுப்பித்து பயன்படுத்தக்கூடிய நிலைக்கு மாற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படாதிருந்ததுடன், மாவட்டச் செயலகத்திற்குச் சொந்தமான அரசாங்க இல்லங்களின் காணிகளிற்கான உரித்துறுதிகளை பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) திம்புலாகல பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்திலுள்ள 05 பிரதேச சமுர்த்தி சங்கங்களினால் சமுர்த்தி நலனாளிகளிற்காக வழங்கப்பட்டிருந்த கடன்களை அறவிடுதல் தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் காணப்பட்டதுடன், வழங்கப்பட்டிருந்த பல்வேறு கடன் வகைகளிலிருந்து 2014 ஒக்தோபர் 11 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 18,844,778 அறவிடமுடியாக் கடன் ஏற்பட்டிருந்தது.

(எ) அரசாங்க நிதியங்களிலிருந்து ரூபா 292,785 செலவிடப்பட்டு வெலிகந்த பிரதேச செயலகத்தின் உத்தியோகபூர்வ நடவடிக்கைகளிற்காக 2006 திசெம்பர் 28 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்த 3 மோட்டார் சைக்கிள்களை பராமரிப்பதற்காக மீளாய்வாண்டில் ரூபா 63,033 செலவொன்று பிரதேச செயலகத்தின் நிதி ஏற்பாட்டிலிருந்து மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அந்த மோட்டார் சைக்கிள்களை கடமை நிமித்தம் உத்தியோகத்தர்களிற்கு வழங்குகையில், முறையான நடைமுறையொன்று பின்பற்றப்படாதிருந்துடன், அந்த மோட்டார் சைக்கிள்களின் கட்டுப்பாடு தொடர்பில் பேணிவரப்படுகின்ற கட்டுப்பாடு, பலவீனமான நிலையில் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 1.14 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளவாறான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளவாறான பதவியணியும் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளவாறான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 33 | 28 | 05 |
| (ii) | மூன்றாம் நிலை | 20 | 10 | 10 |
| (iii) | இரண்டாம் நிலை | 593 | 425 | 168 |
| (iv) | ஆரம்ப நிலை | 100 | 77 | 23 |
| | மொத்தம் | 746 | 540 | 206 |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

பதவியணியினர் பயன்பாடு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையில் சிரேஷ்ட நிலையிலுள்ள 05 உத்தியோகத்தர்களும், மூன்றாம் நிலையிலுள்ள 10 உத்தியோகத்தர்களும், இரண்டாம் நிலையிலுள்ள 168 உத்தியோகத்தர்களும், ஆரம்ப நிலையிலுள்ள 23 உத்தியோகத்தர்களும் என காணப்பட்ட 206 வெற்றிடங்களை நிரப்புவதற்கு மீளாய்வாண்டின் இறுதியளவில் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், சிரேஷ்ட நிலையிலுள்ள ஒரு பதவி மாத்திரம் இது வரை நிரப்பப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலாளரினால் அறிவிக்கப்பட்டிருந்தது.